செ.வெ.எண்: 823 நாள்: 30.11.2019

**புதுக்கோட்டையில் தொடர் மழையையொட்டி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் குடியிருப்பு பகுதிகளில் ஆய்வு.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் தொடர்மழை பெய்து வருவதையொட்டி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (30.11.2019) புதுக்கோட்டை நகராட்சி, கம்பன்நகர், பெரியார்நகர் உள்ளிட்ட குடியிருப்பு பகுதிகளுக்கு நேரடியாக சென்று பொதுமக்களை சந்தித்து ஆய்வு மேற்கொண்டார்கள். பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது.

தமிழகம் முழுவதும் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்ததையொட்டி புதுக்கோட்டை மாவட்டத்திலும் பரவலாக மழை பெய்து வருகிறது. மழையினால் பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்புகளும் ஏற்படாத வகையில் மாவட்ட நிர்வாகம் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. குறிப்பாக மாவட்டத்தில் உள்ள 12 வட்டாட்சியர் அலுவலகங்களிலும் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 24 மணி நேரமும் செயல்படக்கூடிய கட்டுப்பாட்டு அறை 04322- 222207 மற்றும் 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி அமைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும் கடந்த 2 நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. அதன்படி புதுக்கோட்டை மாவட்டத்தில் மழை காலங்களில் ஏற்படும் இடற்பாடுகளான கழிவுநீர் அடைப்புகள், சாலைகள் பெயர்தல், மின்கம்பிகள் அறுதல் போன்ற பல்வேறு இடற்பாடுகளை இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

அந்த வகையில் இன்றையதினம் புதுக்கோட்டை நகராட்சி, கம்பன்நகர், பெரியார்நகர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகள் கழிவுநீர் கால்வாய்கள் சரியாக செயல்படுகிறதா, சாலைகளில் நீர் தேங்குகிறதா, மழைநீரால் சாலை

போக்குவரத்து இடையூரின்றி உள்ளதா போன்ற பல்வேறு நிலைகளில் ஆய்வு செய்யப்பட், குடியிருப்பு பகுதிகளில் உள்ள பொதுமக்களிடம் குறைகள் கேட்டறியப்பட்டது.

இதன்மூலம் பொதுமக்களுக்கு எவ்வித சிரமமும் ஏற்படாத வகையில் சாலைகள் தோறும் சரிவர செயல்படாத கழிவுநீர் கால்வாய்கள் மற்றும் சாலைகளில் தேங்கும் மழைநீர் போன்ற இடற்பாடுகள் ஏற்படுத்தக் கூடிய நிகழ்வுகள் இருப்பின், அதனை உடனடியாக அப்புறப்படுத்த சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார். இந்த ஆய்வின் போது நகராட்சி ஆணையர் ஜீவாசுப்பிரமணியன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.